கொரோனா பாதுகாப்பு நடவடிக்கை

# மெட்ரோ ரெயில்களில் தூய்மையான காற்று செலுத்தப்படுகிறது

## முககவசம் அணியாத 27 பேருக்கு அபராதம்

சென்னை, ஜூன்.30-

மெட்ரோ ரெயில் சேவை கடந்த 21-ந்தேதி முதல் 50 சதவீத இருக்கை வசதிகளுடன் மீண்டும் தொடங்கியது.

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தவும், பயணிகள் 100 சதவீதம் பாதுகாப்பாக பயணம் மேற்கொள்ளவும் பல்வேறு முன்எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### வெப்பநிலை பரிசோதனை

மெட்ரோ ரெயில் நிலைய நுழைவு வாயிலில் பயணிகளுக்கு உடல்வெப்ப நிலை பரிசோதனை செய்யப்படுகிறது. கொரோனா அறிகுறி இல்லாத பயணிகள் மட்டுமே ரெயில் நிலையத்துக்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள்.

முககவசம் அனைவரும் கட்டாயம் அணிந்திருக்க வேண்டும். கைகளை சுத்தப்படுத்திக்கொள்ள காலால் இயக்கப்படும் தானியங்கி கை சுத்திகரிப்பான் எந்திரம் வைக்கப்பட்டுள்ளது.

### தூய்மையான காற்று

ரெயில்கள், ரெயில் நிலையங்களின் உட்புறம் எப்போதும் சுகாதாரமான காற்றை பராமரிக்க தினந்தோறும் தேவையான அளவு தூய்மையான காற்று சுழற்சி முறையில் செலுத்தப்படுகிறது.

குளிர்சாதனப்பெட்டியில் நுண்ணிய கிருமிகள் சென்றாலும் அழிக்கப்பட்டு தூய்மை உறுதிசெய்யப்படுகிறது. அனைத்து பயணிகளும் முககவசம் சரியாக அணிகிறார்களா என்பதை கண்காணிக்க குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

### ரூ.200 அபராதம்

பயணிகள் முககவசம் அணியாவிட்டாலோ அல்லது சரியாக அணியவில்லை என்றாலோ உடனடி அபராதமாக ரூ.200 வசூலிக்கப்படுகிறது. நேற்று வரை 27 பயணிகளிடம் இருந்து அபராதமாக ரூ.5,400 வசூலிக்கப்பட்டுள்ளது.

எனவே பயணிகள் முககவசம் அணிந்து, சமூக இடைவெளியை கடைபிடித்து பயணம் செய்து மெட்ரோ ரெயில் நிறுவனத்துக்கு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.